தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்

MC. No. 16/2023

02.02.2026

**திருமதி. திவ்யா, த/பெ. பன்னீர்செல்வம்**

PW : 1

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் MCA படித்துள்ளேன். நான் தாலுக்கா அலுவலகத்தில் தற்காலிகமாக Data Entry Opertor ஆக பணிபுரிகிறேன். எனது மகன் அச்சுதமங்கலத்தில் உள்ள தனியார் பள்ளியில் படித்து வருகிறார். எனக்கு எதிர்மனுதாரருடன் திருமணம் நிச்சய செய்வதற்கு முன்பாக வேறோருவருடன் திருமண நிச்சயக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த திருமணம் ஏன் நிறுத்தப்பட்டது என்றால் அவர் வேறோரு பெண்ணுடன் பழக்கத்தில் இருந்ததாலும், அந்த பெண் என்னிடம் கேட்டதாலும் திருமணம் நிறுத்தப்பட்டது.

அந்த காரணத்தை எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லியிருக்கிறேன். 2020 ஆகஸ்ட் 10 தேதியிலிருந்து நானும் எனது கணவரும் பிரிந்து வாழ்ந்து வருகிறோம். திருமணத்திற்கு பிறகு எனது மாமியார் வரதட்சணை குறைவதாக இருப்பதாக கேட்டார் என்பதற்காக நான் காவல் நிலையத்தில் புகார் ஏதேனும் கொடுத்தேனா என்றால் இல்லை. எனது வளைகாப்பிற்காக பெற்றோர் வீட்டிற்கு சென்ற பிறகு கணவரின் வீட்டிற்கு திரும்பி வந்தேனா என்றால் குழந்தை பிறந்த பிறகு வந்தேன். வளைகாப்பு என் பெற்றோர் வீட்டில் தான் நடைப்பெற்றது.

என்னுடைய வளைகாப்பிற்கு கணவரும் அவருடைய பெரியப்பா, பெரியம்மாவும் வந்தார்கள். எனது கணவர் வளைகாப்பிற்கு வந்தபோது சாப்பாடு சரியில்லை என்றும், 20 க்கும் மேற்பட்ட நபர்கள் வருவதாக சொல்லி யாரும் வரவில்லை என்று கேட்டதால், எனது வளையல்களை அடித்து உடைத்து வீண் சச்சரவு செய்தார் என்பது குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை.

எதிர்மனுதாரர் சிகரெட் பிடித்தும், மது அருந்திவிட்டும் என்னை கொடுமைப்படுத்தியதாக குறிப்பிட்டுள்ளது குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்திருக்கிறேன். எனது பெற்றோர்க்கு ஒரே மகள் என்றால் சரிதான். பெற்றோர்களுக்கு சொந்தமாக ஒரு மாடி வீடு உள்ளது. வளைகாப்பிற்கு பிறகு நான் சேர்ந்து வாழ வராததால் எனது கணவர் வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு கொடுத்தார் என்றால் சரிதான்.

அந்த அறிவிப்பிற்கு நான் சேர்ந்து வாழ விருப்பம் இல்லை என்றும், பதில் அறிவிப்பு கொடுத்தேன் என்றால் சரிதான்.

நான் சேர்ந்து வாழ வரவில்லை என்பதாலும், குழந்தையை பார்க்க அனுமதிக்க வில்லை என்பதாலும் என் கணவர் விஷம் அருந்தி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்றால் சரியல்ல. என் கணவர் விஷம் குடித்தது உண்மை அவருக்கும் அவரது தாயாருக்கு இடையே சொத்து சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டதால் விஷம் குடித்தார். அப்போதும் மருத்துவமனையிலும் அவருடன் இருப்பதற்காக நான் இருக்க வேண்டும் என்று சண்டை போட்டேன். எனது கணவர் விஷம் குடித்த சமயத்தின் நான் பெற்றோர் வீட்டில் இருந்தேன் என்றால் சரிதான்.

எதற்காக விவாகரத்து வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனது கணவர் 24 மணிநேரம் மது அருந்திவிட்டு இருப்பதால் தாக்கல் செய்து உத்தரவு பெற்றேன். எனக்கும் எதிர்மனுதாரருக்கு ம் இடையே நடைப்பெற்ற திருமணத்தில் எனக்கு விருப்பம் இல்லாததால் எவ்வித காரணமின்றி என்னுடைய பெற்றோர் வீட்டிலேயே இருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் திருமணத்தின் போது வீட்டு உபயோகப்பொருட்களும் மற்றும் நகைகளையும் திரும்ப பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். இருசக்கர வாகனம் மட்டும் அவரிடம் உள்ளது.

தற்போது வரை எனக்கும் எனது குழந்தைக்கும் ஆன அத்தியாவசிய தேவைக்கான தொகைகளை நான்தான் சொந்த வருமானத்தை கொண்டு பார்த்து வருகிறேன் என்றால் சரிதான். எவ்வித காரணமின்றி என் கணவரை பிரிந்து வாழ்ந்து வருவதால் எதிர்மனுதாரர் ஜீவனாம்சம் கொடுக்க கடமைப்பட்டவர் என்றாலும், இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.02.02 16:39:38 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
திருவாரூர்